உ
சிவமயம்

ஆதிதுறை என்னும் காரியானூர்

ஸ்ரீலஸ்ரீ நடேச ஞான தேசிக ஸ்வாமிகள்

சரித்திரச் சுருக்கமும், தோத்திரப் பதிகமும்.

வெளியீடு
சாந்தி ஆச்சிரமம்.

உ

சிவமயம்

ஆதிதுறை என்னும் காரியானூர்

ஸ்ரீலஸ்ரீ நடேச ஞான தேசிக ஸ்வாமிகள்

சரித்திரச் சுருக்கமும், தோத்திரப் பதிகமும்.

எழுதியவர்:

தவத்திரு. கோவிந்த ஸ்வாமிகள்

சாந்தி ஆச்சிரமம்,

காரியானூர்.

1961

வெளியீடு

சாந்தி ஆச்சிரமம்.

ஜனவரி 1961.

விலை அணா ஆறு

குமரப்பா அச்சகம், அம்மாப்பேட்டை, சேலம்-3.

உ

சிவமயம்

அடியேனை ஆள
அருள் மேனி தாங்கி
அவனியில் எழுந்தருளிய
அரிய தயாநிதியான
அமல சற்குருநாதன்
அடியடிகளில்
அர்ப்பணம்
(சமர்ப்பணம்)

உ

சிவமயம்

ஆதிதுறை என்னும் காரியானூர்

ஸ்ரீ பஞ்ச மூர்த்திகள் வணக்கம்.


எழு சீர் விருத்தம்

நலநிறை சுவேத நதிபெரு காதி
நற்றுறை கணேசனைக் குகனைப்
பொலமுறு மேனி யாதிதாங் ‡தோன்றி
புனிதவீ சரையறி வுயிர்க்கு
மலமற வருளும் பெரியநா யகியா
மரகத மேனியம் பிகையை
நிலவணி யிறைவ னுருநம் நடேச
நிமலசற் குருவினைப் பணிவாம்

‡தோன்றி என்பது வினையாலணையும் பெயர்
அறிவு அருளுமென வியையும்.

உ

சிவமயம்



ஸ்ரீலஸ்ரீ நடேச ஞான தேசிக ஸ்வாமிகள்

சாந்தி ஆச்சிரமம், காரியானூர்.

சிவமயம்

ஸ்ரீலஸ்ரீ நடேசஞான தேசிக ஸ்வாமிகள்

சரித்திரச் சுருக்கம்.

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே சன்மார்க்கங் குறைந்து துன்மார்க்கம் மேலிடுங்காலத்தில் அவ்வப்போது ஸ்ரீ பரமேஸ்வரரே சீவகருணையால் பெரியோர்களாக அவதரிப்பார், -என்பது வேதாகமநூற்றுணிபாகும். அங்ஙனமே

தென்றமிழ் நாட்டின்கண்ணே கருணைத்தாயாய் விளங்கும் காவேரி நதியால், நீர்வளம் நிலவளம் நிறைந்த திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிரித் தாலூக்கா துறையூர் சமீபம் மதுராபுரி என்கின்ற சித்திரப்பட்டிக் கிராமத்தில் தெய்வீக ராஜன் மரபில் சத்திய சீல நற்குணம் வாய்ந்த சபாபதி உடையாருக்கும் கற்புக்கரசியாராகியவிசாலாக்ஷி அம்மையாருக்கும் திருஞான சம்பந்த ஸ்வாமிகள் அவதரித்தது போலும், ஸ்ரீஇராமபிரான் அவதரித்தது போலும் ஸ்ரீ சங்கர பகவன் அவதரித்தது போலும், கலியப்தம் (4999) க்குச்சரியான விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 14ந்தேதி புதன்கிழமை பூரட்டாதி நக்ஷத்திரம் மகர லக்கனம் கூடிய சுபதினத்தில், முதல் பிள்ளையாக, நம் ஸ்வாமிகள் அவதாரஞ்செய்தனர். பிள்ளைபருவத்திலேயே அடக்கம், சாந்தம் முதலிய நற்குணங்களே ஒருருவாகப் பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, ஐந்தாமாண்டில் சோமசுந்தர ஐயரென்ற வீர சைவப் பெரியாராகிய உபாத்தியாயரிடம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பண்டைக் காலத்துப் பழக்கம் போல் நீதி நூல்கள், சதகங்கள், புராணங்கள் முதலியவற்றை நன்குகப் படித்து வருங்கால் இரவில்வீட்டில் நீண்டநேரம் படித்தால் பிறருக்கு இடைஞ்சல் எனக்கருதித் தெருவி லுள்ள யூனியன் லாந்தர் கம்பத்தின் கீழிருந்து சிரத்தை யாகக் கற்று முன்னேற்றமடைந்து 14 வயதிற்குள்ளே

பள்ளிக்கூடப் படிப்பை முடித்து 2 வருஷம் குடும்பத்தில் இருந்து பூர்வஜன்ம தபோபலத்தால் இனி, துறவடைந்து மெஞ்ஞான சற்குருவையடைய வேண்டுமென்று கருதி அதி தீவிரதர வைராக்கிய சீலராய்த் தமது பதினாறுவது வயதில் திரு அண்ணாமலையார் கோவிலையடைந்து புஷ்பத் தொண்டு செய்து வருங்கால் ஸ்ரீ ஈசான்ய மடத்துச் சாதுக் கள் திருஅண்ணாமலையார் கோயில் தரிசனத்திற்கு போய் வருகிற போதெல்லாம் நமது சுவாமிகளின் நற்குண நற் செய்கைகளையும் எப்போதும் ஆழ்ந்த பரமாத்ம சிந்தனை யையும் பார்த்து இது ஓர்அவதார மூர்த்தியென்று கருதி ஈசான்ய மடத்திற்கு அழைத்து வந்து அக்காலத்தில் ஷை மடாலயத் தலைமை பூண்டு அடியார்களுக்கு அன்னை போன்று இன்சொல்லும், மலர்ந்த முகமும் அருட்கண் ணோக்கமும் பெற்றுச் சலிக்காமல் நாடோறும் வேதாந்த சாத்திர பாடம் போதித்துக் கொண்டிருந்த கருணைவள்ள லாகிய ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞான தேசிக ஸ்வாமிகள்பாற் சேர்க்க ஷை ஸ்ரீ சற்குருமகாசன்னிதானங்கள் நமது ஸ்வாமி களின் உயர்ந்த குணங்களையும் மிகுந்த சித்த ஏகாக்கிரத் தன்மையினையும் பார்த்து இவர் பிற்காலத்தில் மிக உன் னத நிலையினை யடைவர் என்று திருவுள்ளத்தெண்ணி வேதாந்த சாஸ்திரங்களைப் போதித்து வந்தார்கள். நமது ஸ்வாமிகள் மிகவும் ஏகாக்கிர சித்தம் உடையவர்களாத லின் மிக அழுத்தந் திருத்தமாக ஷை சாஸ்திரங்களை மனப்பாடஞ் செய்து அர்த்தங்களை நன்குகச் சிந்தித்துத் தெளிந்து நிட்டாபரராயிருந்ததுமன்றி தம்முடைய சற் குரு மூர்த்தியிடம் ஆப்தம், அங்கம், தானம், சத்பாவமென் னும் நால்வகைத் தொண்டிலும் சிறந்துவிளங்கினார்கள்.

தமது முதல்சற்குருநாதராகிய ஸ்ரீ மகாதேவஞான தேசிக ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி திருவளர்ச்சோலை ஸ்ரீ சுப்ராய ஸ்வாமிகளிடமும் சிலகாலந்தங்கி சாஸ்திர பாடங்கேட்டும். சமஸ்கிருதங் கற்ற சாதுக்களிடமிருந்து சமஸ்கிருதமுங் கற்றுத் தேர்ச்சியடைந்து சமஸ்கிருதத் திலேயே பகவத்கீதை முதலிய ஞான சாஸ்திரங்களை பாராயணமும், ஆராய்ச்சியும் செய்து பாடஞ்சொல்லியும் அம்பாசமுத்திரம் ஸ்ரீ ஆத்துமானந்த ஸ்வாமிகளிடம்

தமிழில் இலக்கண இலக்கியங்களையும் கற்றுக் கவிபாடும் வல்லமை பெற்றும், அநேக தோத்திரங்களையும், சாஸ்திரங் களையுமருளிச் செய்தார்கள். ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஞான தேசிக ஸ்வாமிகள் கோவிலூர் மடத்தின் தலைமை வகிக்கச்சென்றபோது தன்சத்ஸந்ததியாகிய நமது ஸ்வாமி களையே ஈசான்ய மடத்திற்கு இவர்களது 23-வது வயதில் தலைமையாக்கினார்கள், அன்னாளிலிருந்து 26 ஆண்டுகள் நமது ஸ்வாமிகள் மடத்தின் தலைமை தாங்கி யருட்பணி யாற்றினார்கள்.

அருணையம்பதியில் ஸ்வாமிகள் வதிந்த நாட்களில் பொதுவாக ஆஸ்திகரனைவர்க்கும் சிறப்பாக சாதுக்களுக் கும், முறையே தெய்வ வழிபாட்டிற்கும் துறவு நிலைக்கும் வழிகாட்டியாக விளங்கினார்கள். அருணாசல சிவத்தின் நிழலில் அருட்குடியாய் வாழ்கிறோம் என்னும் அகலா நினைவினராய் வாழ்ந்தார்கள், மடத்தின் தலைமை தனது என்ற நினைவெழாத்திண்ணியராய் ஏனைய அடியார்களைப் போல் எளிய வாழ்க்கை நடத்தினார்கள். சாஸ்திர விதி களுக்கு முற்றுங்கட்டுப்பட்டு ஆசார அனுஷ்டானங்களை நடத்தி தவமே தமது தலையாய பணியெனக் கொண் டொழுகினார்கள்.

''தவத்தால் வருவதே இன்பம்'' என்பது அவர்கள் துணிபு. ஏறிய பீடத்திருந்து குருவருளால் தமது மாணாக்கர்களுக்கு வேதாந்த பாடம் போதிக்க மலைமாண்பு ஆசானாய் விளங்கினார்கள். ஆனால் அவர்கள் பேச்சு மிகக் குறைவு. அவற்றில் வீண் சொல்லே காண முடியாது, இத்துணை நிதானத்திலும் மடத்தின் பரி பாலனத்தில் கண்காணிப்புங் குறைவு படாது. வித்வான் கள் ஏழை எளியவர் அனைவர்களுக்கும் பரிவு காட்டுவார் கள். வாயில்லா ஜந்துக்களிடம் அளவற்ற கருணை. சுருங் கச் சொல்லுமிடத்து மெய்ஞ்ஞானத்தின் சமதிருஷ்டி உள்ளத்தில் நிலைநின்று ததும்பியது! காயிகம், வாசிகம், மானதம் என்னும் மூவகைத் தொண்டும் நிகழ்ந்து கொண்டே இருக்க குறிக்கோள் மாத்திரம் யாதோ ஒன்றை நாடி நிற்கும். வேதாந்தத்தே வேறற விளங்கும்

வேதப்பொருளிடத்தே அன்ருே முமுக்ஷு", முத்தர் நாட்டம் முற்றும். உள்விழித்துப் புறம் உறங்குவார் நிலையது. அந்நாட்டத்தை வாய்கொண்டு விளக்கப்படாது. இத்தகைய பெற்றியாரை தம் துறவு குழாம் சூழ அருணேசன் சந்நிதியில் காண்பது ஓர் பாக்கியம்.

"சோற்றுத்துறை எம்மான்என" ஆண்டவனுக்கு ஒரு பெயர் உண்டு. ஈசனைக் கோயிலில் வழிபட்டு விடுதிக்கு வந்து நடமாடும் கோயில்களுக்கு அன்னமிட்டுப் பார்த்து அவர்கள் உவகைப்பூத்தலைக் காணலும் ஓர் புண்ணியமாம். இத் துணைக்காரியங்களிலும் தான் தனித்திருககும் குறிக்கோளில் மாத்திரம் புரள்வதில்லை. அங்ஙனந் தனனந்தனிமையிலிருந்து உளம்பூத்துக்காய்த்துக்கனிந்து இருந்தனர். மடத்தில் ஆற்றும் அறம் அனைத்தும் தேகான்ம பாவமொழிந்து பிரமான்ம உணர்வு விளங்கற் பொருட்டேயன்ருே!

இவ்வாறு நமது ஸ்வாமிகள் ஈசான்ய மடத்துத் தலைவராய் இருந்து வருங்கால் திருவண்ணுமலை கார்த்திகை ரதோற்சவத்தில் ரதத்தின் முன்னுல் ஸ்ரீ அண்ணுமலையாரை தரிசித்துக் கொண்டிருக்கிறபோது மடத்து சாது ஒருவரை ஒரு போலீஸ்காரன் அடிக்க, கருணுமூர்த்தியாகிய நமது ஸ்வாமிகள் அவரை அடிக்க வேண்டாமென்று போலீஸ்காரனைத் தயவால் தடுக்க, ஷை போலீஸ்காரன் நமது ஸ்வாமிகளை இன்னுரென்று அறியாமல் மூர்க்கத் தனத்தால் ஸ்வாமிகள் திருமேனியில் பல இடங்களில் அடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு போக, பெரியோர்களும், சீமான்களும் நமது ஈசான்ய மடத்து ஸ்வாமிகளாயிற்றே இத்தகைய புண்ணியத் திருமேனியையுமிப்படிச் செய்யலாமாவென்று போலீஸ் கையிலிருந்தும் விடுவித்து ஸ்வாமிகளை மடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தனர். இவ்விஷயமறிந்த சூப்ரெண்ட் சர்க்கிள் முதலியோரும் மற்ற தனவந்தர் பலரும் நமதுஸ்வாமிகளை அணுகித் தங்கள் திருமேனியிலடித்த போலீஸ்காரனை வேலையிலிருந்தும் விலக்கித் தகுந்த தண்டனை விதிக்கின்ருேமென்று கேட்டுக்கொள்ள, இச்சரீரத்தை அடித்த போலீஸ்காரரை ஒரு தீங்கும் செய்யக்கூடாது, ஏதோ வினைப்பிரகாரம் நடந்து விட்டது என்றும்

வழியிலே போகும் போது மரக்கிளை ஒடிந்து மேலே விழுந்து விடுமானால் அம்மரக்கிளையைக் கோபித்தென்ன செய்வது

ஒரு கட்டிடத்தில் நுழையும் போது கதவு அருகால் தலையிலிடித்து விட்டால் அந்த அருகாலை கோபித்தென்ன செய்வது.

போகும் வழியில் பெரும் புயல் காற்றடித்துக் கண் முதலிய உறுப்புக்களுக்குத் துன்பந்தருமானாலப்புயலை என்ன செய்வது

தன்னுடைய நாக்கைத் தன்னுடைய பற்களால் கடித்துக் கொண்டால் யாரிடம் கோபிக்கிறது

நமது ஒரு அவயவம் மற்றொரு அவயவத்தை அடித்தால் யாரைக் கோபித்துக் கொள்ளக்கூடும்.

இது கர்மாதீனமாக வந்திருக்கிறது இது நம்மால் அனுபவிக்கக்கூடியது.

சமணர்கள் செய்த மிகக்கொடிய துன்பத்தையும் சகித்து சிவத்தைச் சிந்தித்ததினால்தான் ஸ்ரீஅப்பர் ஸ்வாமிகளுக்குப் பிறவி நீங்கிற்று. ஆகையால் நாமும் துக்காதிகளைச் சகித்துச் சிவத்தையே நினைந்திருத்தல் நலம்.

என்பது முதலிய அனேக பொன்மொழிகளை பார்க்க வந்த அன்பர்களுக்கெல்லா முபதேசித்துக் கொண்டிருந்தார்கள். கும்பகோணம் ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் கிரிப்பிரதக்ஷிணம் வரும்போது நமது ஸ்வாமிகளின் பெருந்தன்மைக் குணங்களை மிகவும் பாராட்டி ஈசான்ய மடத்து முகப்பிற்கே வந்து தன்கழுத்திலுள்ள புஷ்ப மாலையை கழற்றி தன் கையினாலேயே நமது ஸ்வாமிகள் கழுத்தில் போட்டினிய மொழிபுகன்றாசீர்வதித்தார்களென்றால் நமது ஸ்வாமிகள் ஒப்பற்ற குணக்கடல் என்று சொல்லவும் வேண்டுமோ!

தம்மை யடித்தவரை ஒன்றும் செய்ய வேண்டா மென்றே தீர்மானமாகச் சொல்லிவிட்டார்கள். இச்செய லைப் பார்க்குமிடத்து ஸ்ரீ மெய்ப்பொருள் நாயனுர் தன்னை வெட்டியவனை ஒரு தீங்கும் செய்யாமல் கொண்டுபோய் விட்டு வாருங்களென்று சொல்லி, சுகமாக அனுப்பி வந்தேனென்ற மறுமொழி கேட்ட பிறகே சிவபதவி யடைந்த மாதிரியாகவும், ஸ்ரீ மகாத்மா காந்தி தன்னைச் சுட்டவனை ஒன்றுஞ் செய்யக் கூடாதென்று சொல்லிய மாதிரியாகவும் நமது ஸ்வாமிகளும் சொல்லி தனது திருமேனியிலுள்ள வலியையும் உள்புண்களையும் மனோ தைரியத்தால் சகித்தும் இருந்தார்களென்ருல் நமது ஸ்வா மிகள் உயர்ந்த சாந்த குணுலயமென்று சாற்றவும் வேண் டுமோ? ஆனுலப் போலீஸ்காரன் சிலநாளில் கெட்டழிந் தான்.

குரும்பேறியென்ற கிராமத்திலிருந்து ஒருவர் குடும் பத்தை விட்டுச் சாதுவாக தனக்கு சொந்தமான திரவி யங்களை வீட்டிலிருந்தும் எடுத்துக் கொண்டு ஈசான்ய மடத்திற்கு வந்து நமது ஸ்வாமிகளிடம் சந்நியாசம்பெற்று ஷை ருபாய்களை நமது குருநாதருக்கு அர்ப்பணஞ் செய்யு மபிப்பிராயத்துடனிருந்து திடீரென காலமாய்விட்டார். நியாயமாய்ப்பார்க்குமிடத்துச் சிஷ்யன்சொத்து குருவுக்கே சேரவேண்டும். அவ்வித சம்பிரதாயமிருந்தும் ஷை குரும் பேறி சாதுவின் மனைவி மக்கள் வந்து கேட்டவளவில் மடத்திலுள்ள சிலர் நமது மடத்திலும் பொருள் குறை வால் வருந்துகின்ருேமே கொஞ்சம் பணத்தையாவது வைத்துக்கொண்டு மற்றதை கொடுத்து விடலாமென்று அபிப்பிராயப்பட்டுங்கூட ருபாய்கள் முழுதையும் கருணை யோடு ஷை குரும்பேறி சாதுவின் குடும்பத்தார்களுக்கே ஒப்பித்து விட்டார்கள் என்ருல் நம் ஸ்வாமிகளின் நிரா சையின் வலிதான் என்னே?

ஷை ஈசான்ய மடத்தில் மாணவர்களுக்கு ஸ்ரீ ஞான வாசிட்டம் முழுமையும் பாடஞ்சொல்லி சர்வதாரிவருஷம் ஆனி மாதம ஷை வாசிட்ட சமாப்தி சமயம் ஷை மாணவர் கள் பாத பூஜை பண்ணி பாத காணிக்கையாக வைத்த

ரூபாய் ஐநூறையும் ஈசான்ய மடத்திற்கே சேர்த்து விட்டு இனி மடாதிபத்தியம் வேண்டாம் தனித்துத் தவமியற்ற வேண்டுமென்ற குறிக்கோளோடு ஷை ஈசான்ய மடத்தில் தான் உபயோகித்த பொருள்களையும் வேறுள்ள பொருள் களையும் எடுக்காமலும், தன் இடையில் அணிந்திருந்த காவி வேஷ்டி முதலியனவும் அவிழ்த்து வைத்துவிட்டு அன்னிய அன்பர்களளித்த வஸ்திரத்தைக் காவி தோய்த்து அணிந்து கொண்டுச் சர்வ சங்கபரித் தியாகி யாக மடத்தை விட்டுப் புறப்படுவதைப் பார்த்த அன்பர் கள் அடுத்த வேளைக்கு உணவுக்கோ வழிச்செலவுக்கோ ஒன்றையுங் கருதாமல் ஸ்வாமி செல்லுகிறதே என்று பரி தபித்ததைப் பார்த்து

மேயப்போகின்ற மாடு கொம்பிலே புல்லைக்கட்டிக் கொண்டா மேயப்போகின்றது? என்ற சமாதானப் பொன் மொழிகளை புகன்று வெளிப்பட்டதென்றால் நமது ஸ்வாமி கள்அரியவைராக்கிய மூர்த்திகளென்பதிலையமுமுளதோ? இவ்வாறு அருணை ஈசான்ய மடத்தை விட்டு கோவிலூ ருக்குச் சென்ற துறவறப் பெருந்தகையாராகிய நமது ஸ்வாமிகளை நினைந்து வருந்தி, ஸ்ரீ ரமண மகரிஷிகளே நம் திருவண்ணுமலையிலிருந்த ஒப்பற்ற மாணிக்கத்தை இழந்தோம் என்று கூறியருளினர் என்றால் நம் ஸ்வாமி களின் பெருமையை அளவிட்டு நம்மால் பேசவுங் கூடுமோ?

இவ்வாறு திருவண்ணுமலையிலுள்ள துறவிகளும் ஊரிலுள்ளாரும் பக்கத்திலுள்ள அநேக கிராம வாசிகளும் நமது ஸ்வாமிகள் நம்மூரை விட்டு வெளியே போய்விட்ட தால், தீபமில்லா வீட்டையும், அரசனில்லா நாட்டை யும், சந்திரனில்லா வானத்தையும் போல் ஆய்விட்டதே என்றுகதறிக்கதறிக்கண்ணீர்விட,கோவிலூரையடைந்து தமது ஆதிசற்குருநாதராகிய ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக ஸ்வாமிகளின் சமாதி கோவில் கும்பாபிஷேக வைபவத் தைச் சிறப்பாக முடித்து அங்கு சில நாள் தங்கியும் அம் பாசமுத்திரத்தில் ஸ்ரீ பிரமகீதை பாடம்சொல்லிப் பூர்த்தி செய்தும் விரும்பிஅழைத்த மெய்யன்பர்கள் ஊர்களிலும்

சிற்சில தினங்கள் தங்கியும் சர்வதாரிவருஷம் தை மாதம் 15ந்தேதி ஆதிதுறையாகிய காரியானூர் வெள்ளாற்றின் தபோவனத்தில் சாந்தி ஆச்சிரமம் அமைப்பித்து தவமியற்றி யிருந்தார்கள். ஸ்வாமிகள் ஷை ஊருக்கு வருவதற்குமுன் நீண்ட காலமாக ஷை ஊரில் பலமான கக்ஷி சண்டைகளிருந்துவந்தது, "கானகமிலங்கு புலி பசுவொடு குலாவுநின் கண்காண" என்று ஸ்ரீ தாயுமானவ ஸ்வாமிகள் கூறியாங்கு நமது சற்குருநாதர் சந்நிதியில் புலியும் பசுவும் ஓரிடத்தில் சாந்தமாய் வாழுமென்ருல் பகுத்தறிவுள்ள மனிதர்கள் ஏன் ஒற்றுமையாயிரார்கள். சாந்தி ஆச்சிரமத்திற்கு இருதிறத்தாரும் வந்து நமது சாந்த மூர்த்தியை தரிசிக்க ஆரம்பித்தவுடனே சமாதானமாயிருங்களென்று திருவாக்கால் சொல்லாமலேயே சகோதரர் போன்று ஒன்றுபட்டு வாழச் செய்தார்களென்ருல் நமது ஞானத் தபோதனரின் அருட்சத்தி மகிமைதான் என்னே?

அனேகர் சாந்தி ஆச்சிரமத்திற்கு நிலம்எழுதி வைக்கிரேமென்று கேட்டுக் கொண்டதற்கும் பிரஹ்மானந்தத்தையே நாடியிருக்கும் எங்களுக்கு ஸ்ரீ ஆண்டவரிருக்கிருர் என்று மறுத்து விட்டார்கள். என்ருல் மண்ணுதியாசையறுத்த மகாமுனிவராவார்களென்பதில் மயக்கமென்னே?

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு" என்னுந் திருக்குறளுக்கு சான்ருக நமது ஸ்வாமிகள் விளங்கினுர்கள். திருமேனியில் எவ்வித நோய்வரினும் மருந்து முதலியன உபயோகிக்காமல் பிரம்மானந்த மேலீட்டிலிருந்தனர்.

மாடு முதலிய பிராணிகள் இழுக்கும் வண்டியேறுவதில்லை. யாருக்கும் எந்தஜீவனுக்கும் யாதொரு துன்பமும் செய்வதில்லை. "அகிம்சா, பரமோதர்மா" என்ற கொள்கையை அனுஷ்டித்து வந்ததுமன்றி, தன்னிடம் வந்து சேர்ந்த சாதுக்களுக்கும் மற்றவர்களுக்குந் தாய் போன்று விரும்பிய உணவுகளை நிரம்ப உண்ணச் செய்வார்கள். சுயநலம் சிறிதுமின்றிப் பிறர் உண்டு திருப்தியாய் இருப்பதைக் கண்டுதான் திருப்தியுறுவார்கள்.

உணவருந்தும் போதும் மற்ற சமயங்களிலும் பரம சுத்தமாக இருப்பார்கள். உயர்ந்த ஜாதியென்று சொல்லிக் கொண்டிருப்பவர்களும் நமது ஸ்வாமிகளைப் போல் சுத்தமாய் இருக்கமாட்டார்களென்று அடியேனபிப்பிராயப்படுகின்றேன். பிறரைப் பற்றி ஒரு குறையையும் பேசமாட்டார்கள். அன்னியர் யாராவது தன்னிடம் வந்து பிறர் குறைபேச ஆரம்பித்தாலும் அவ்வித வார்த்தைகளை பேச இடங்கொடுக்கமாட்டார்கள். யார் தன்னிடம் வந்தாலும் பேச ஆரம்பித்தால் சாஸ்த்திர அனுபவ வாக்கியங்களை சிறந்த இலக்கண வழுவின்றி அழுத்தந்திருத்தமாக அவசரமின்றி சிறிது நேரமே பேசுவார்கள். உலக வார்த்தைகளைப் பேசவிரும்பமாட்டார்கள், இன்னும் அளவற்ற சற்குணங்கள் நமது ஸ்வாமிகளிடம் மலிந்திருந்தன. சற்குண சாகரமே மனித வடிவமெடுத்து வந்ததென்று சொல்லுவோமாளுல் அது மிகையாகாது. நமது ஸ்வாமிகளிடம் விபூதி முதலியன வாங்கப்பெற்றவர்களுக்கு அவரவர்கள் விரும்பிய புத்திர சம்பத்து, தன சம்பத்து, நோய்கள் நீங்குவது, முதலிய அனேக அனுக்கிரகங்கள் செய்தும், ஞான சாஸ்திரங்களைப் போதித்தும், பஞ்சாக்ஷராதி மந்திரோபதேசங்கள் செய்தும், இல்லற துறவற ஒழுக்கங்களை அவரவர்களுக்குப் போதித்தும் தான் சந்நியாச தருமத்திலிருந்து சிறிதும் வழுவுதலின்றியும் இடைவிடா நிஷ்டாபரராகவிருந்து தமது 62வது வயதில் அனேக சந்நியாச மடாதிபதிகளும் மற்ற அடியார்கள் கூட்டமும் திருநீறு உருத்திராக்கங்கள் தரித்து நமது ஸ்வாமிகளைப் புடைசூழ்ந்து சம்போ மகாதேவ என்று கோஷித்துக் கொண்டே இருக்க, விகாரி வருஷம் மாசிமாதம் 11ந்தேதி உத்திராட நக்ஷத்திரம் மங்களவாரம், தினந்தோறும் இரவில் எழுந்து உட்கார்ந்து நிஷ்டைகூடும் நேரமாகிய 2-மணி சுமாருக்கு பரிபூரணமடைந்தார்கள்.

இன்றும் சிவலிங்காகாரமாயிருந்து பிரார்த்தித்த மெய்யன்பர்களுக்கு அனுக்கிரகம் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமியவர்களின் எதிர்காலவுணர்ச்சிகளில் சில வருமாறு

பெத்தநாயக்கன்பாளையம் திருவாளர், சின்னுப் பிள்ளையவர்கள் ஒருநாள் காரியானூர் வந்து ஸ்வாமிகட்கு திருவடி பூஜையும் மகேஸ்வர பூஜையும் செய்தார்கள். அவ்வமயம் மஹேஸ்வர பூஜைக்கு, 15. இலைகள் போட்டுப் பரிமாறும் போது, ஸ்வாமிகள், அந்த இலைகளை நெருக்கமாகப் போட்டு இன்னும் இரண்டு இலைகளைப் போடச் சொன்னார்கள். அவ்வண்ணமே போட்டு வைத்திருந்தது. மகேஸ்வர பூஜை முடிந்து உண்ண ஆரம்பிக்கும் பொழுது, மை பிள்ளையவர்களின் அண்ணர், திருவாளர், ஆறுமுகம் பிள்ளையவர்களும், மற்றுமொரு அன்பரும் வந்தார்கள். உடனே ஸ்வாமிகள் அவ்விருவர்களையும் அவ்விரண்டு இலைகளிலும் அமர்ந்துண்ணக் கட்டளை விட்டார்கள். அதுபோது ஆங்குள்ளார் வியப்புற்றனர்!

ஸ்வாமிகள் விதேக முத்தி அடைவதற்கு சின்னாள் முன்னர் ஒருநாள் பகல் 11-மணியளவிற்குத் திருவாளர் கிருஷ்ண ஸ்வாமியுடையாரவர்கள் வீட்டிலிருந்து நாற்காலியொன்று கொண்டுவந்து போடும்படி ஸ்வாமிகள் சொன்னார்கள். அவ்வண்ணமே போடப்பட்டது. உடனே பெத்தநாயக்கன்பாளையம், தவத்திரு பொன்னம்பல ஸ்வாமிகள் அவர்கள் வந்தார்கள்.

இன்னமொருநாள், பூண்டி, திருவாளர், மெய்வராய பிள்ளையவர்கள் தன் இல்லத்திலிருந்து காரியானூர் செல்லும்படி நல்ல நேரம் பார்த்துச் சுமார் 11-மணியளவிற்குப் புறப்பட்டு மாலை 5-மணிக்கு அவ்விடம் சேர்ந்தார்கள். அவரிடம் காலை 11-மணிக்குப் புறப்பட்டீர்களோ என்று ஸ்வாமிகள் கேட்டார்கள்.

மற்றுமொருசமயம், காரியானூர் விவசாயிகள் மழையின்மையினால், புஞ்சைப் பயிரை விதைத்திருந்தார்கள்

பின்னர் மழையின் வருகையை ஸ்வாமிகள் முன்னரே யுணர்ந்து நஞ்சைப் பயிரை விதைக்கும் வண்ணம் கட்டளையிட்டார்கள், அவர்களும் அவ்வண்ணமே விதைத்துப் பயன் பெற்ருர்கள்.

மீண்டும் ஓர் சமயத்தில் திருவாளர் சு. சிதம்பர உடையார் பழனியாத்திரை போய்வர ஸ்வாமிகளிடம் பிரயாணம் சொல்லிக் கொண்டார், அப்போது ஸ்வாமிகள் துணைக்கு யார் வருகிருர்? செ. ராமசாமி உடையாரை அழைத்துக் கொண்டு போக வசதியாயிருக்கும் என்றதற்கு அவர் காண்ட்ரைட்டு வேலையில், அதிக தீவிரமாயிருக்கிருர், பெரும்பாலும் வரமாட்டார் என்ருர். திருவாளர். செ. ராமசாமி உடையாரை, அழைத்து நீங்கள் சிதம்பர உடையாருக்குத் துணையாக பழனிக்குப் போய் வரலாமா? என்று வினவினுர்கள். அவர் கவர்மெண்டு வேலையின் அவசரத்தைத் தெரிவித்து நின்ருர்: வேலையை நிறுத்திவிட்டு அவசியம் போய்வாருங்கள். என்று கட்டளையிட்டார்கள். ஷை ராமசாமி உடையார் எதுவும் பதில் சொல்லாவண்ணம் வீடு சென்ருர். மனதில் ஒருவகைஎண்ணமும் எழாது மயக்கத்துடனிருக்கும்போது மறு உத்திரவு வரை வேலையை செய்யப்படாது! என்று ஒரு தடையுத்திரவு அரசியல் தபாலாகக்கிடைத்தது! அதன்பின் மனதில் எவ்வித, சந்தேக, விபரீதமின்றி பழனியாத்திரைக்குச் சென்று வந்தார்கள். பெரிதும் ஆச்சரிய முற்ருர்கள்! தடையுத்திரவின் வருகையை அறிந்துதான் நமது ஸ்வாமிகள், கண்டித்துப் பழனிக்குத் துணை போய்வரும்படி கட்டளையிட்டார்கள்! என்பது ஆச்சரியப்படத்தக்கது!

சேலம் அம்மாப்பேட்டை, திருவாளர் ஊ. பெ, அய்யாசாமி உடையார், தனக்கு மக்கள் சம்பத்து உண்டா? இல்லையா? என்று தெரிந்துக் கொள்ள மருதூர் போக காரியானூர் வழியாக வந்து நமது ஸ்வாமிகளை தரிசித்தபோது, அவர்களிட உள்ளத்தைத் தெரிந்து மருதூர் பிரயாணம்போக வேண்டாம் என்று தடுத்தாட்கொண்டார்கள். அதுபோது ஷை உடையார் மனைவி பாப்பாத்தியம்மாள் உடல் நலங் குன்றி வருந்த,

ஸ்வாமிகள் பழங்களைப் பிரசாதமாக ஒவ்வொருவருக்கும் கொடுத்து இந்தப்பழத்தை நோயுள்ளவர் உண்ணவேண்டும் மற்றப்பழங்களோடு இதைச் சேர்க்கப்படாது என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். அதுபோல் செய்ய, நோய் நீங்கி ஆரோக்யம் அடைந்து அதுவே காரணமாக, ஷை பாப்பாத்தியம்மாளுக்கு மக்கள் சம்பத்துண்டாயிற்று. இது போன்றன இன்னும் பல உள்ளன.

குறிப்பு:—

நேரில் கண்டதுங் கேட்டதுமாகிய சில வரலாறு சுருக்கமாக எழுதப் பெற்றது. இன்னும் அனேக அரிய நற்குண நற்செய்கைகளெல்லாம் இந்த அவதார மூர்த்திகளிடம் நிறைந்திருந்தனவென்பதிற் சந்தேகமில்லை நேரிலறிந்த பெரியோர்கள் இன்னும் விரிவாக வெளியிட முன்வருமாறு ஆண்டவரருள் புரிவாராக.

உ
ஓம் கணேசாய நம:

ஸ்ரீமத் நடேச ஞானதேசிக ஸ்வாமிகள் தோத்திரப்பதிகம்

காப்பு

சீர்வளரும் ஆனைமுகத் தேவே வுனைப்பணிந்தேன்
கார்வளரும் காரியா னூரிலுள-பேர்கொள்
நடேச முனிவரனை நாளுந் துதிக்கத்
தடாது மகிழ்ந்துவரந் தா.

எண் சீர் விருத்தம்

சீர்கொண்ட முனிவர்களின் மரபதனில் வந்தச்
சிருங்ககிரிச் சங்கரனூர் பரம்பரையைச் சேர்ந்தப்
பார்கொண்ட புகழ்முத்தி ராமலிங்க முனிவன்
பண்புடனே அமைத்ததிருக் கோயிலூர் மடத்தில்
பேர்கொண்ட புகழ் ஏழாம் மடாதிபதி யாகிப்
பிறங்குமகா தேவகுரு முதற்சீட ராகும்
நார்கொண்ட அலங்கலனி நடேசமா குருவின்
நறைமலர்கள் அணிபதங்கள் நந்தலைமேல் வைப்பாம் 1

எழுசீர் விருத்தம்

ஒழுக்கமே விழுப்பந் தருதலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்புதல் கடனென்
றிழுக்கில்வா சகமாம் வள்ளுவர் வாக்கை
யிருதயத் திருத்திநா டொறுமவ்
வழுக்கிலா நெறியில் நடந்துநல் லடியார்
வாழ்க்கையைத் திருத்திநின் றுண்டு
செழிக்குமா நடேச ஞானதே சிகனின்
திருவடி களைத்தினம் பணிவாம். 2

தண்ணளித் தயையிற் றாயினுஞ் சிறந்த
தவத்திரு குருவருள் ஞானக்
கண்ணினைப் பெற்றுக் கோயிலூர் மரபின்
கருதரும் பெருமையை விளக்கிப்
புண்ணியர் வாழும் காரியா னூரிற்
பொலிவுடன் கருணைசெய் தருள
நண்ணிய நடேச ஞானதே சிகனை
நாடொறும் பணிந்திட ரொழிப்பாம் 3

இடத்தினிற் பொருளில் உடலிலே யென்றும்
எள்ளள வேனும்பற் றின்றி
திடத்தினுல் மதிப்பை விட்டுவெள் ளாற்றின்
திகழ்தரு கரையினில் அமர்ந்து
விடத்தினுங் கொடிய காமத்தை யெரித்து
விவேகமே லோங்கிநன் ஞான
நடத்திறை வடிவாய் ஒன்றிடும் நடேச
ஞானதே சிகன்றனைத் தொழுவாம் 4

அறிந்தவர்க் கழகு கற்றுணர்ந் தடங்க
லாகுமென் றறைந்தநன் மொழிக்குச்
சிறந்தசான் றாக விளங்கினேன் தன்னைச்
சேவித்தோர் சாந்தியுற் றனரே
மறந்தரு மவித்தை யறுத்துமெய்ஞ் ஞான
மகோததி மூழ்கியா னந்தத்
திறந்தனை யடைந்து மகிழ்ந்திடும் நடேச
தேசிகன் றனைத்தினம் பணிவாம். 5

மடமதைத் துறந்து மனைதொறு மிரந்து
வந்திடும் பிச்சையை யுண்டு
விடமெனும் விடய விரத்தியுந் துறவின்
விரதமே நாட்டமாய் நல்ல
வடகலை தனையுந் தென்கலை தனையும்
வழுவறக் கற்றுணர்ந் தவற்றின்
நடைமுறை மையினி லொழுகிடும் நடேச
ஞானதே சிகன்றனைத் தொழுவாம் 6

தந்தைமா தேவ குருபர னிடத்தில்
சாலவு மிளமையி லடைந்த
அந்தநாண் முதலா யார்வத்தோ டின்றும்
அகமுக நாட்டமே யாக
முந்துநூல் விதித்த முறைபிற ழாமல்
முழுவயி ராகமாய் நடந்த
நந்திடா வுறுதி யுளமுடை நடேச
ஞானதே சிகன்றனைத் தொழுவாம் 7

அருணையி சான்ய மடத்தினற் பதியாய்
அருளுட னிருந்தது மன்றி
கருவினை யுருத நிலையினை யுணர்த்தும்
கருதம் பிரமவித் தையினை
ஒருதர மன்றிப் பலதர மடியார்க்
குரைத்திடச் சிவபரம் பொருளே!
நரவடி வினைப்போல் எழுந்தருள் நடேச
ஞானதே சிகன்றனைப் பணிவாம். 8

சங்கர னனைய நின்றிரு வுடலைத்
தனதென அன்புடன் பேணும்
தங்கமே யனைய தொண்டர்கள் மிகவுந்
தன்னியர் ஆயினர் அதனால்
இங்குநம் இழிந்த இச்சையா திகளை
எரித்திட அருள்மிக சுரந்து
நங்குரு வடிவாய் எழுந்தருள் நடேச
ஞானதே சிகனைப்போற் றிடுவாம் 9

அடியனே னுடலில் உள்ளவித் தோலை
அறுத்துரித் தெடுத்துபக் குவமாய்
நடைசெயுன் னிரண்டு திருவடி களுக்கு
நல்லிரு பாதுகை யாக
கடையனே னளிக்க விரும்பினே னெனையுங்
கருதிநற் றண்ணளி புரிவாய்
நடமிடு மிறையே மனுடனாய் வந்த
நடேசமா ஞானதே சிகனே 10

காமனை யெரித்த கண்ணுத லென்கோ
　　கருதருஞ் சுகமுனி யென்கோ
மாமறை புணர்ந்த வசிட்டனே யென்கோ
　　வாதரா யணமுனி யென்கோ
தோமறு நாவுக் கரசனே யென்கோ
　　துளகறு துறவிறை யென்கோ
வாமதே வென்கோ வள்ளலே நடேச
　　மாதவ ஞானதே சிகனே. 11

ஸ்ரீலஸ்ரீ நடேச ஞானதேசிக ஸ்வாமிகள் விதேக முத்தி யடைந்தபோது இசைத்த

இரங்கற்பா.

மங்கா துயர்ந்த பொன்மேனி
　　மறைவால் ஏங்கி மிகவுருகி
தங்கம் அனைய தாயர்களும்
　　தவிக்கப் பார்த்துச் சகிப்பேனே
இங்குன் இனிய பொன்மொழியை
　　இனியுங் கேட்கப் பெறுவேனே
நங்கை மார்கள் மயக்கொழித்த
　　நடேச குருவே நவில்வாயே 1

எங்கும் நிறைசற் சித்தின்ப
　　வெளிலார் மேனிக் கொருபோதும்
பங்க மேது மில்லெனினும்
　　பந்த முடையோர்க் கவ்வியல்பை
அங்க மொன்றி யுரைப்பதலால்
　　ஆகு மோவின் னருளுருவாந்
துங்க நடேச வுருமறையின்
　　துயர்கள் தொலைப்பா ரெவர்சொல்லாய். 2

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
17	15	அலங்கலனி	அலங்கலணி
19	12	கருதம்	கருதரும்